தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041—சித்திரை 23

2010 மே 6, வியாழக்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், புதிய சட்டப் பேரவை-தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு."

குடிமக்களை அரவணைத்து ஆட்சி நடத்தும் நல்லரசின் அடிச்சுவட்டை நானிலமே போற்றி நிற்கும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள், வினா வரிசை எண் 141, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

141—

அலுவலகம்

***54522—திரு. சு.ப. வேலுமணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, குறிச்சி நகராட்சியில் துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பேரூர் தொகுதி, குறிச்சி நகராட்சியில் துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் (பகுதி அலுவலகம்) அமைக்கும் திட்டம் ஏதும் தற்போதைய நிலையில் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி.*

திரு. சு.ப. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட குறிச்சி நகராட்சி, சிட்கோ பகுதியில், புரட்சித் தலைவி அம்மா ஆட்சியில் இடம் சர்வே செய்யப்பட்டது. சிட்கோவுக்குச் சொந்தமான இடம் அங்கே உள்ளது. குறிச்சி நகராட்சி, குனியமுத்தூர், மதுக்கரை யூனியன், தொண்டாமுத்தூர் யூனியன் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் தற்போது தெற்கு அல்லது மத்திய அலுவலகத்திற்குச் செல்லவேண்டிய நிலை உள்ளது. மேலும், வாகன நெரிசல் போன்ற பல சிரமங்களைத் தவிர்க்கும்பொருட்டு, அங்கே துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் தேவை. பீளமேட்டில்* South R.T.O. *அலுவலகம் 90 ஆயிரம் ரூபாய் வாடகையில் இயங்குகிறது. குனியமுத்தூர் நகராட்சி, கோவைபுதூரிலே வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான பல ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. ஆகவே, மக்களின் நலன் கருதி, அந்தப் பகுதிக்கு அலுவலகத்தை மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் இடத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால், குறைந்தது 10 ஆயிரம் போக்குவரத்து வாகனங்கள் அப்பகுதியில் இருந்தாக வேண்டும். அதேபோன்று, பகுதி அலுவலகம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், அப்பகுதியில் மூவாயிரத்திற்கும் அதிகமான வாகனங்கள் இருந்தாக வேண்டும். கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, குறிச்சி நகராட்சியில் தற்சமயம் குறைந்தளவு*

சட்டமன்றம் LEGISLATURE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 மே 6]

போக்குவரத்து வாகனங்களே உள்ளன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், 1,592 வாகனங்கள் மட்டுமே உள்ளன. சரக்கு வாகனங்கள் 792; தேசிய அனுமதி (National Permit) பெற்ற சரக்கு வாகனங்கள் 51; சுற்றுலா வாகனங்கள் (Maxi Cab) 49; சுற்றுலா சீருந்து 232; ஆட்டோ ரிக்ஷாக்கள் 187; அனுமதியற்ற சரக்கு வாகனங்கள் 180; கல்வி நிறுவனப் பேருந்துகள் 36 மற்றும் தனியார் வாகனங்கள் (Private Service) 65. இவை மட்டுமே இருக்கின்றன. மேலும், குறிச்சி நகராட்சியிலிருந்து 9 கிலோ மீட்டர் தொலைவில் கோவை தெற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் இருக்கின்ற காரணத்தால், தற்போது குறிச்சி பகுதிக்குத் தேவையில்லையென அரசு கருதுகிறது. வருங்காலங்களில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி.

திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியில் துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைந்தால், இங்கிருக்கின்ற மக்களுக்கு நல்ல பல சூழ்நிலைகள் அமையும். மேலும், அந்தப் பகுதியின் அருகில் காக்கா சாவடி Outgoing Check Post உள்ளது. அங்கே இன்ஸ்பெக்டர் எவரும் இல்லை. எந்த வாகனமும் சரியான முறையில் சோதனையிடப்படுவதில்லை. தினமும் நூறு மணல் லாரிகள் மற்றும் பர்மிட் இல்லாத பல பஸ்கள் அங்கே போகக்கூடிய சூழ்நிலை உள்ளது. இந்த அலுவலகம் அங்கே அமைக்கப்பட்டால், அது தடுக்கப்படும்.

அதேபோல, 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்கள் கனரக வாகனம் ஓட்ட உரிமம் பெற முடியாது என்பதை அரசு தளர்த்தவேண்டும். நாடாளுமன்றத் தேர்தல் வாக்குறுதியிலேகூட மாண்புமிகு அம்மா அவர்கள் இதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதேபோல, குனியமுத்தூரில் ஒரு பேருந்து நிலையமும், மதுக்கரை, குரும்பபாளையம் மற்றும் பச்சாபாளையம் ஆகிய இடங்களில் பேருந்து வசதிகளும் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதற்கேற்ப, வாகனங்களின் எண்ணிக்கை அதிகமானால், இன்னும் ஓர் ஆயிரம் வாகனங்கள் சென்றால், உடனடியாக அடுத்த ஆண்டு அங்கே துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பதற்கு முயற்சியை எடுக்கலாம்.

மேலும், சோதனைச் சாவடியில் சரியாக சோதனையிடுவதில்லை என்று சொன்னார். அதனால்தான் களியக்காவிளை, கந்தன்சாவடி, ஓசூர் மற்றும் பெத்திகுப்பம் ஆகிய 4 இடங்களிலுள்ள சோதனைச் சாவடிகளை அதிநவீன சோதனைச் சாவடிகளாக அமைப்பதற்கு அரசு முடிவெடுத்து, முதற்கட்டமாக ஓசூர் மற்றும் பெத்திகுப்பம் ஆகிய இடங்களில் சுமார் 70 கோடி ரூபாய் செலவில் Integrated Check Post-ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகளை அமைப்பதற்கு முயற்சி எடுத்து, வெகுவிரைவிலே அதற்கான வேலைகள் தொடங்கவிருக்கின்றன. Check Post-களில் அதிகாரிகள் அடிக்கடி ஆய்வு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதற்கேற்ப, அரசு மறுபடியும் அதில் அதிக கவனம் எடுத்துக்கொள்ளும்.

முற்பகல் 9-35

பேரவைத் தலைவர் அவர்களே, கனரக வாகன ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு 10 ஆம் வகுப்பு வரை படித்திருக்கவேண்டும் என்பது மத்திய அரசினுடைய சட்டம். ஆனால், இப்பொழுது தனியார் வாகன உரிமையாளர்களும், ஏன் நம்முடைய அரசுப் போக்குவரத்துக் கழகங்களும் பேருந்து ஓட்டுநர்களை தேர்வு செய்யும்போதுகூட 10 ஆம் வகுப்பு படித்த ஓட்டுநர்கள் அதிகம் கிடைக்காத காரணத்தால், அவர்கள் 8 ஆம் வகுப்பு வரை படித்திருந்தாலே போதும் என்ற நிலையை அரசு இப்பொழுது எடுத்திருக்கிறது. வெகுவிரைவிலே அதைப் பற்றிய அறிவிப்பு வெளிவரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 142, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.